தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர், கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் மலைவாழ் மக்கள் சுமார் 1,500—க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் உள்ளனர். அங்கு அதிகப்படியான தேன் உற்பத்தியாகின்றது. அந்தத் தேனைப் பதப்படுத்தாமல், நேரடியாகப் பிழிந்து, பாட்டில்களில் அடைத்து, குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர். மேலும், அந்தத் தேன் விரைவில் கெட்டு விடுகின்றது. எனவே, அரசே நேரடி கொள்முதல் செய்து, பதப்படுத்தி, துறையூர் நகரப் பகுதியில் விற்பனை நிலையம் அமைத்துக் கொடுத்தால், மலைவாழ் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அதைப் பயன்படுத்துகின்ற மக்களுக்கும் தரமான தேன் கிடைக்கும். எனவே, பச்சைமலைப் பகுதியில் உற்பத்தியாகும் தேன் கொள்முதல் செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

183—

மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

***50217—திரு. கே.பி.** பரமசிவம்:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி, வட்டகாட்டுப்புதூரிலுள்ள அரசு தொடக்கப் பள்ளிக்கு மேலே செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி, வட்டகாட்டுப்புதூரிலுள்ள அரசு தொடக்கப் பள்ளியை ஆய்வு செய்ததில், அத்தொடக்கப் பள்ளியின்மீது எந்தவிதமான மின் கம்பிகளும் செல்லவில்லை. ஆனால், பள்ளியின் கட்டடத்தின் அருகில் உள்ள சாலை வழியாகத்தான் தாழ்வு அழுத்த மின் பாதை செல்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியில் இமாலய வெற்றி, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எப்பொழுதும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தன்னிகரில்லா தாயே, ஏழையெளியோரின் தேவதையே! தாய்க்குலம் போற்றும் தவமே! தன்னலமற்ற சேவையில் தன்னிறைவு கண்டவரே! ஒன்றரைக் கோடி தொண்டர்களின் குலதெய்வமே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர காவல் தெய்வமே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத்தாரகை தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முதலிபாளையம் ஊராட்சி, வட்டகாட்டுப்புதூரிலுள்ள அரசு தொடக்கப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தின் மேல் மின் பாதை செல்வதால், அந்தத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க முடியாத சூழல் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி, அந்த மின் பாதையை மாற்றி அமைத்துக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பள்ளியின் வளாகத்திற்குள் அந்த மின் கம்பி செல்லவில்லை என தெரியவந்தது. ஆனால், அந்தப் பள்ளிக்கு மிகவும் அருகில் அந்த மின் கம்பி செல்கிறது. அந்தப் பள்ளிக்கு வெளியிலே அந்த மின் பாதை சென்றாலும்கூட, சுற்றுச் சுவர் கட்டுவதற்கு இடையூறாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளினை ஏற்று, உடனடியாக இந்த வார இறுதிக்குள்ளாகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த மின் பாதையை மாற்றி அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு உறுதுணையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், ஒரு வார காலத்திற்குள் மின் பாதையை மாற்றும் பணியை முடித்துக் கொடுப்பதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் புத்தம் புதிய திட்டங்களை அறிவிப்பதன் மூலமாகத் தமிழக மக்களை வாழ்விக்கின்ற, நம் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, துணைக் கேள்வியைக் கேட்கின்றேன்.

இதே அவையில் ஏற்கெனவே ஒரு முறை வில்லிவாக்கம் தொகுதியில் மேலே செல்கின்ற மின் கம்பிகளை மாற்றி அமைக்கவேண்டும் என்கின்ற கோரிக்கையை விடுத்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் ஆய்வு செய்து,

2015 செப்டம்பர் 1]

ஆவன செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்குப் பின்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வையால், தமிழ்நாட்டில் முதல்முறையாக, வில்லிவாக்கம் தொகுதியில், இதுவரை எங்குமில்லாத வகையில் ஒரு புதிய திட்டமாக, மேலே செல்கிற ஒயர்களுக்குப் பதிலாக, மேலேயே செல்கிற Aerial Bunched Cable என்று சொல்லக்கூடிய, A.B.C. என்று அழைக்கக்கூடிய முறையில் அனைத்து ஒயர்களையும் ஒன்றாகச் சேர்த்து, தொட்டாலும் shock அடிக்காமல், கீழே விழுந்தாலும் shock அடிக்காமல் இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கீழே செல்கின்ற மின் கம்பிகள்கூட மழைக் காலங்களிலே shock அடிக்கக்கூடும். ஆனால், மேலே செல்கின்ற Aerial Bunched Cable (A.B.C.) முறையில் ஐந்து மின் கம்பிகளை ஒன்றாக இணைத்து செய்யக்கூடிய ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வில்லிவாக்கம் தொகுதிக்குத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தாழ்பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த Aerial Bunched Cable (A.B.C.) திட்டம், வில்லிவாக்கம் தொகுதியில் மீதம் இருக்கக்கூடிய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் பாதுகாப்பான மின் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் காரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு Aerial Bunched Cable (A.B.C.) என்ற பாதுகாப்பான மின் வழித்தடத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அவருடைய வில்லிவாக்கம் தொகுதியில் பணிகள் நடைபெற்று

வருகின்றன. அந்தப் பணிகள் வில்லிவாக்கம் பகுதி மட்டுமல்லாமல், நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

சாலையை அகலப்படுத்துதல்

***54800 திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை முதல் முத்துப்பேட்டை வரையிலான மாவட்ட முக்கியச் சாலையினை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டை—முத்துப்பேட்டை மாவட்ட முக்கியச் சாலையினை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டைக்குச் செல்லக்கூடிய சாலை மிக முக்கியமான சாலையாகும். அச்சாலை,*